**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02–ஆம் நாள் செவ்வாய் கிழமை

**இ.ம எண்.5/2022**

**மற்றும்**

**இ.ம.எண்.6/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.107/2015**

1. பொம்முத்தாய்
2. சாமியப்பன் என்ற தங்கபாண்டியன்

... மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

சின்னமாதா நாயக்கர் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 28.07.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.ஹரிஹர ராமச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.கே.முத்துவேல் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்வதற்கு ஏதுவாக வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டி பிரிவு 151 சிபிசி மற்றும் கட்டளை 18, விதி 17 சிபிசி–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்களின் சுருக்கம் :**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அசல் வழக்கானது பிரதிவாதிகளின் தரப்பு சாட்சியங்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக மேலும் சில கேள்விகள் வா.சா.1–யிடம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த மனுக்கள்.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :**

அசல் வழக்கானது பிரதிவாதிகளின் தரப்பு சாட்சியங்களுக்காக வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல்வேறு தேதிகளில் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அசல் வழக்கில், வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்கத்திற்காகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **பிரச்சனை –**

இந்த இரு மனுக்களிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுக்களை அனுமதிக்க போதுமான காரணங்கள் உள்ளதா ? என்பதேயாகும்.

5. **தீர்வு –**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். எதிர்மனுதார்/வாதி பாகப்பிரிவினைக்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் வாதியின் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் தரப்பு சாட்சியங்களுக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது. வா.சா.1–யிடம் சொத்து சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதனால், இந்த மனுக்களை மனுதாரர்கள் தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள். வா.சா.1, பிரதிவாதிகளின் தரப்பில் மூன்று நாட்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணை

அனைத்தும் 2018 வருடத்திலேயே முடிவடைந்துள்ளது. அந்த குறுக்கு விசாரணையில் சொத்து பற்றி விபரங்களும் கேட்கப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பாகபிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டிருப்பதாலும், விசாரணை நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் போதுமான சந்தர்ப்பம் கொடுத்து, விசாரிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால், இந்த மனுக்களை செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு இரு மனுக்களுக்கும் சேர்த்து மொத்த செலவு தொகையாக ரூ.1000/-த்தை 10.08.2022-ஆம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில், இவ்விரு மனுக்களும் அனுமதிக்கப்படும் எனவும், அவ்வாறு செலுத்த தவறினால் மனுக்கள் தள்ளுபடி செய்யதக்கது எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 11.08.2022.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2022-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 02-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.08.02 14:09:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.5/2022
மற்றும்
இ.ம.எண்.6/2022
உள்
அசல் வழக்கு
எண்.107/2015
உத்தரவு – தெளிவு
நாள் –02.08.2022

.